STC.No. 16/2025
நாள் 18.09.2025.
P.W.1 – (தினேஷ்குமார் )
எதிரி ஆஜரில்லை. இணையவழி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.
மனுவின் பெயரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

**1.** நான் பி.காம். படித்துள்ளேன். நான் 2021ம் ஆண்டு படித்து முடித்தேன். மாரிச்சாமி என்ற அருண்குமார் என் அண்ணன் ஆவார். என் அப்பா ஆசிரியராக வேலை பார்க்கிறார். என் அம்மா வேலை ஏதும் பார்க்கவில்லை வீட்டில்தான் உள்ளார். என் அண்ணன் அருண்குமார் வேலைக்கு செல்கிறார். ஸ்ரீவில்லிபுத்தூர் டிவிஎஸ் கம்பெனியில் ஸ்பேர் இன்ஜார்ஜ் ஆக வேலை பார்க்கிறார். என் அண்ணனுக்கு திருமணமாகிவிட்டது. எனக்கு திருமணம் ஆகவில்லை. நான் ராஜபாளையம் HDFC Insurance Companyல் Life Insurance Sectionல் வேலை பார்க்கிறேன். எனக்கு மாத சம்பளம் ரூ.25,000/–. என்னுடைய மாத சம்பளம் என் வங்கி கணக்கில் செலுத்துவார்கள். என் வங்கி கணக்கை பார்வையிட்டால் அந்த விபரம் தெரியும் என்றால் சரி. என் அப்பா மாத சம்பளம் ரூ.1 லட்சம் வாங்குவார். எதிரியை எனக்கு 2 வருடங்களாக தெரியும். என் வேலை விசயமாக நான் என் அலுவலகத்திற்கு தினமும் செல்லவேண்டும் என்றால் ஆம். அலுவலகத்திலும் வேலை இருக்கும், அலுவலகத்திற்கு வெளியேயும் வேலை இருக்கும். தினமும் வருகை பதிவேட்டில் மொபைல் மூலமாக வருகையை பதிவு செய்யவேண்டும்.

2. என் புகார் மனு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் நானும் எதிரியும் 2 ஆண்டுகளாக ரியல் எஸ்டேட் தொழில் செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. என் புகார் மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் எந்தெந்த இடங்களை வாங்கினோம் எந்தெந்த இடங்களை விற்பனை செய்தோம் எனக் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. நான் எதிரியுடன் வியாபாரம் செய்திருந்தால் அதன்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரி. என்னுடைய செல்போன் எண்.9715684465 ஆகும். நான் இந்த செல்போன் நம்பரை 10 வருடங்களாக உபயோகித்து வருகிறேன். எதிரியின் அலைபேசி எண் எனக்கு தெரியும். நான் எதிரியிடம் இந்த 2 ஆண்டுகளில் செல்போனில் பேசியுள்ளேனா என்றால் பேசியுள்ளேன். நான் என் செல்போனில் யாரிடம் பேசியுள்ளேன் என்ற விபரங்களை எடுக்கலாம் என்றால் ஆம். அந்த விபரத்தை எடுத்து பார்த்தால் நான் எதிரியிடம் செல்போனில் பேசியது தெரியும் என்றால் ஆம். நான் என் அப்பா செல்போன் மூலமாகவும் நேரடியாகவும் எதிரியிடம் பேசியுள்ளேன்.

3. நான் என் செல்போனில் இருந்து எதிரியிடம் ஒரு முறையும் பேசியது இல்லை என்றால் சரியல்ல. பேசியுள்ளேன். நான் அவ்வாறு பேசியது இல்லை

என்றாலும் என்னுடைய செல்போன் கால் டிடைல் 2 ஆண்டுகளுக்கானது பார்த்தால் நான் எதிரியுடன் பேசவில்லை என தெரியவரும் என்றால் சரியல்ல. நான் புகார் மனு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் எதிரி நிலம் வாங்குவதற்காக ரூ.1,05,00,000/- என்னிடம் கேட்டதாக குறிப்பிட்டுள்ளது எந்த இடம் என்று நிலம் விபரங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி.

(சாட்சி உடல் நிலை சரியில்லை எனத் தெரிவித்ததால் குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்படுகிறது.)

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.